**Starting time 11.38A.M.**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No.198/2014**

Deposition of P**.W. -1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. Kalpana, Gr. III Bench Clerk of this court, on 22-02-2021 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜசேகரன் | Father Name | : தர்மலிங்கம் |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**2, 3 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**: தாவா சொத்து சம்மந்தமாக 19.01.1933 ல் பாகம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தானது டிசம்பர் மாதம் 1933 ஆம் ஆண்டு என் தாத்தா பி.கே. ராமசாமி சுயமாக வாங்கிய சொத்தாகும். மேற்படி என் தாத்தா தாவா சொத்தை வாங்கியதற்கான ஆவணத்தை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. 19.01.1933 ல் ரங்கசாமி உடையார், ராமசாமி உடையார், நடராஜ் உடையார் ஆகியோருக்கிடையே பாக பிரிவினை ஏற்பட்டது. அந்த பாகப்பிரிவினை பத்திரம் **பி.வா.சா.1** ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறது. இந்த தாவா ச.எண் 294/11 ல் 73 ல் 22 செண்ட் , ச.எண்.294/9 ல் 40 செண்ட், 294/10 ல் 14 செண்ட் பாகம் பிரித்து தரக்கோரி தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த தாவா சொத்து ரத்து பத்திரங்களான வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ. 2 சம்மந்தப்பட்டது. இந்த தாவா சொத்துக்கள் என் தாத்தா ராமசாமி உடையார் பெயரிலும் அதன் பின் என் தகப்பபனார் தர்மலிங்கம் பெயரிலும் அனுபவத்தில் இருந்து கந்தாயம் செலுத்தினார்கள். மேற்படி கந்தாய

ரசீதுகள் (எண்ணிக்கை 10) **<u>பி.வா.ஆ. 2</u>** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்திற்குண்டான மூலப்பத்திரங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. பி.வா.சா.ஆ.1 மூலம் எனது தாத்தாவிற்கு ஏற்பட்ட சொத்தை எனது தாத்தா அவருடைய காலத்திலேயே விற்றுவிட்டார். மேற்படி சொத்து எப்போது விற்பனை செய்யப்பட்டது என்றால் நான் சிறுவனாக இருக்கும் போதே விற்பனை செய்யப்பட்டுவிட்டது. மேற்படி பாகம் ஜனவரியில் ஏற்பட்டபிறகு எனது தாத்தா 1933 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஒரு சொத்து வாங்கினார். எனது தாத்தா முத்துலட்சுமி அம்மாள் என்பவருக்கு 31.01.1972 ல் சொத்துக்கள் விற்றார். மேற்படி கிரய ஆவணம் ராமசாமி உடையார் மற்றும் எனது அப்பா தர்மலிங்கம் எனக்காகவும், எனது தம்பி 2 ஆம் பிரதிவாதியான கிருஷ்ணமூர்த்திக்காகவும் கார்டியனாக இருந்து ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் கிரயம் பெறும்போது நான் இளவராக இருந்தேன். அதனால் மேற்படி பத்திரம் எழுதியது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பத்திரத்தின்படி என்னுடைய தாத்தா சொத்துக்கள் விற்கப்பட்டுவிட்டது என்று சொன்னால் மேற்படி பத்திரத்திற்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை. எனது அப்பா எனக்கு எழுதிவைத்த 3 வது தான செட்டில்மெண்ட ஆவணத்தின் தேதி எனக்கு ஞாபகம் இல்லை அதை நான் இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை. மேற்படி 3 வது தான செடடில்மெண்ட் ஆவணத்தின் மூலம் கிடைத்த சொத்தில் ஒரு பகுதி சொத்தை நாவுக்கரசு என்பவருக்கு நான் விற்று விட்டேன். வா.சா.ஆ .9 பாகப்பத்திரமானது என் தகப்பனாருக்கும் எனது தாத்தா பி.கே.ராமசாமிக்கும் என்பவருக்குமிடையே ஏற்படுத்தப்பட்டது. மேற்படி வா.சா.ஆ. 9 மூலம் எனது தகப்பனாருக்கு கிடைக்கப்பெற்ற சொத்து எனது பெயரில் ஏற்படுத்தப்பட்ட மூன்று தான செட்டில்மெண்ட ஆவணத்திலும் அடங்குமா என்றால் இல்லை. மேற்படி எனது பெயரில் ஏற்படுத்தப்பட்ட தான செட்டில்மெண்ட் ஆவணங்களில் கண்ட சொத்துக்களை தவிர என் அப்பா பெயரில் பாக்கி சொத்து தற்போதும் இருக்கிறது. மேற்படி பாக்கி சொத்திற்கான ச.எண் 317/5, அதில் வில்லை வீடும் உள்ளது. தற்போது என் தந்தை பெயரில் மேற்படி வில்லை வீட்டை தவிர வேறு சொத்துக்கள் இல்லை என்றால் எனக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுக்கும்போது நஞ்சை

நிலம் 2 ஏக்கர் ச.எண் 302/1, 302/2, 302/3 நிலம் இருந்தது. தற்போது அந்த நிலம் என்னவாயிற்று என்று எனக்கு தெரியாது. மேற்படி நிலம் காட்டுக்கோட்டை கிராமத்தில் இருப்பதால் நான் அதில் தலையிடவில்லை. எனக்கு எதிரான கேள்விகளுக்கு நான் வேண்டுமென்றே தெரியவில்லை மற்றும் இல்லை என்று பதில் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் உண்மையை மட்டுமே சொல்கிறேன். வா.சா.5 மற்றும் 7 ஆவணங்களில் கையொப்பம் இட்டுள்ள சாட்சிகள் பெயர்கள் எனக்கு தெரியாது. மேற்படி இரண்டு ஆவணங்களும் ஏற்படுத்தப்பட்டபோது இருந்தேனா என்றால் நான் சார்பதிவாளர் அலுவகத்திற்கு வெளியே நான் இருந்தேன். மேற்படி ஆவணம் ஏற்படுத்தப்பட்டபோது சாட்சிகள் இருந்தார்களா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. சாட்சிகளை என் அப்பா தான் அழைத்து வந்தார். மேற்படி என் அப்பா அழைத்து வந்த நபர்கள் சாட்சி கையொப்பம் செய்ததை நான் பார்க்கவில்லை. எனது அப்பாதான் என்னை பத்திர அலுவலகத்துக்கு அழைத்து போனார். மேற்படி இரண்டு ஆவணங்களிலும் சாட்சி கையொப்பம் இட்டவர்களை எனக்கு தெரியும் என்றும் நான்தான் என் அப்பாவை வற்புறுத்தி மேற்படி வா.சா.ஆ. 5 மற்றும் 7 ஆவணங்களை எழுத வைத்தேன் என்றால் சரியல்ல. மேற்படி இரண்டு ஆவணத்திலும் சாட்சி கையொப்பம் செய்தவர்களை நான்தான் அழைத்து வந்தேன் என்றும் அதை ஒத்துக்கொண்டால் எனக்கு விரோதமாக அமையும் என்பதால் அவர்கனை தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 5 மற்றும் 7 ல் இன்னார் என்று நிரூபித்தவர் என்பதில் கையொப்பம் செய்துள்ள ரத்தினம் மகன் மணி மற்றும் காதர் மொய்தீன் மகன் முகமது அலி ஆகிய இருவரும் உள்ளூர்காரர்கள். மேற்படி வா.சா.ஆ 5 மற்றும் 7 ல் கண்ட வாசகங்கள் நான் சொல்லி எழுதவில்லை. மேற்படி இரண்டு ஆவணங்கள் நான் பத்திர அலுவலகத்திற்கு செல்லும் முன்பே எனது அப்பா தயாராக எழுதி வைத்திருந்தார். நான் தனியாக பின்பு காரில் சென்றேன். அப்போது என் அப்பா அழைத்துச்சென்றதாக சொன்னது பொய் என்று சொன்னால் சரியல்ல. அவர் என்னை பத்திர அலுவலகத்திற்கு வா என்றுதான் அழைத்தார். வா.சா.ஆ 5 மற்றும் 7 ஆவணங்களில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் மேற்படி ஆவணங்கள் என் கைக்கு

கிடைத்தபிறகு படித்துப்பார்த்தேன். மேற்படி ஆவணங்களை பதிவு செய்வதற்கு முன்பு நான் படித்து பார்க்கவில்லை. நான் எம்.எஸ்.ஸி வரை படித்துள்ளேன். எனது அப்பா படித்துள்ளாரா என்றால் படித்துள்ளார் என்ன படித்துள்ளார் என்று எனக்கு தெரியாது. மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணங்கள் என் பெயரில் எழுதி வைத்திருக்கிறேன் என்று என் தந்தை என்னிடம் சொன்னார். அவ்வாறு சொன்ன பின்பு என்ன எழுதி வைத்திருக்கிறார் என்று நான் படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப் பார்க்கவில்லை. மேற்படி ஆவணங்கள் என்னால் எழுதப்பட்டது என்றும் என அப்பாவை சாட்சி கையொப்பம் போடுவதாக சொல்லி அழைத்துச்சென்று மேற்படி ஆவணங்களில் கையெழுத்து வாங்கிவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. எனது மாமனாரின் ஊர் தாண்டாகவுண்டன் புதூர், ராசிபுரம் வட்டம். மேற்படி வா.சா.ஆ. 5 மற்றும் 7 எழுதும்போது என் அப்பாவிற்கு வயது 65 இருக்கும். நானும் எனது அப்பாவும் காட்டுகோட்டை என்ற ஊரில்தான் இருந்தோம். 1990ல் கிருஷ்ணமூர்த்தி காட்டுகோட்டையை விட்டு வெளியேறிவிட்டார். அவர் ஆந்திராவில் ஒரு மருந்து கம்பெனியில் வேலையில் இருந்தார். மேற்படி கிருஷ்ணமூர்த்தி எப்போது காட்டுக்கோட்டைக்கு வந்தார் என்றால் அவர் இன்றுவரை காட்டுக்கோட்டைக்கு வரவில்லை. என் அம்மா 2010ல் காலமாகிவிட்டார். ஆனால் அதுவரை எனது அப்பாவுடன் தான் இருந்தார். மேற்படி தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதம்போது என் அம்மா உயிருடன் இல்லை. எனது அப்பா வீடும் எனது வீடும் அருகருகே என்றால் இல்லை. நான் தோட்டத்தில் உள்ள வீட்டில் குடியிருக்கிறேன். என் அப்பா ஊருக்குள் குடியிருக்கிறார். நான் என் அப்பாவிற்கு நான் சமைத்து கொண்டுபோய் கொடுப்பேனா என்றால் இல்லை, அவரே தனியாக சமைத்துக் கொள்வார். நான் என்னுடைய குறுக்கு விசாரணையில் எனது அப்பா எனது பராமரிப்பில்தான் இருந்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் முழு பராமரிப்பில் இல்லை. மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணங்கள் எழுதுவதற்கு சுமார் 2 மாதங்கள் முன்பு வரை எனது அம்மா உயிருடன் இருந்தார். மேற்படி எனது அப்பா அவருடைய மனைவி இறந்த துக்கத்தில் இருந்த சமயத்தில் அந்த பலவீனத்தை பயன்படுத்திக்கொண்டு அவரை அழைத்துக்கொண்டுபோய் வா.சா.ஆ.5 மற்றும் 7 ஆவணங்களை என் பெயரில் எழுதிக்கொண்டேன் என்றால் சரியல்ல.

| | |
|---|---|
| வா.சா.ஆ-1 | 19.01.1933 ஆம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் SRO copy |
| வா.சா.ஆ-2 | கந்தாய ரசீதுகள் (எண்ணிக்கை 10) அசல் |

பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

Ending Time : 12.47.P.M.

**ஒப்பம்/- அ.நர்மதாராணி**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**ஆத்தூர்.**